Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 31-7-1985 புதன்கிழமை (ஆடி 16 ஜுல்கஃதா 12) முழக்கம் 175

## வவுனியா இளைஞரின் சடலம் ஆஸ்பத்திரியிலிருந்து கடத்தல்

(வவுனியா)

வவுனியா ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த இளைஞரின் சடலம் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது பண்டாரிக்குளத்தடியில் நேற்று முன்தினம் ராணுவத்தால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட இவ்விளைஞனின் சடலம் ராணுவத்தாராலேயே ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. நேற்று முன்னிரவு இரண்டு மணியளவில் இச்சடலம் கடத்தப்பட்டதாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சடலம் அடையாளம் காணப்படவில்லையெனவும் கூறப்பட்டது.

# முஸ்லிம் குழுவின் பிரதிநிதிகள் தெரிவில் இழுபறி தமிழக விஜயம் பின்போடப்படும் சாத்தியம்

தமிழ்நாட்டுக்குச் செல்வதற்கான முஸ்லிம் குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் விடயத்தில் பல இழுபறிகள் ஆரம்பமாகியுள்ளது தெரியவந்துள்ளது.

இக்குழுவில் பல்வேறு முஸ்லிம் இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் தமது பிரதிநிதிகள் இடம்பெற வேண்டுமென்று கோருவதே இதற்குக் காரணமாம்.

இதற்கிடையே வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒருவர்கூட குழுவில் இடம்பெறாத குறையும் குழுத் தலைவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நெருக்கடிகள் அதிகரிப்பதால் குழுவினரின் தமிழக விஜயம் பின்போடப்படலாம் அல்லது அங்கத்தவர்களின் தொகை அதிகரிக்கப்படலாமென்று முக்கிய முஸ்லிம் பிரமுகர் ஒருவர் ஈழமுரசுக்குத் தெரிவித்தார். முன்னர் இக்குழுவில் அறுவர் இடம் பெறுவர் என அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

திம்பு மாநாட்டைக் குழப்பியடிக்கும் வம்பு நோக்கத்துடன் முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழகத்துக்குச் செல்லக்கூடாதென்று ஜனாப் அலவி மௌலானா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ராணுவ பாவனைக்கு வந்த எட்டு பெற்றோல் டாங்குகள் கடத்தல்!

## பரந்தன் ரயில் நிலையத்தில் நேற்று நடந்தது ஆயுதமுனையில் பறிக்கப்பட்டதாகப் புகார்

(கிளிநொச்சி)

வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களின் பாவனைக்காகக் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் நிலத்தின்கீழ் புதைப்பதற்குப் பயன்படுத்தப்படும் எட்டு பெற்றோல் டாங்குகள் பரந்தனில் நேற்றுப் பிற்பகல் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட சரக்கு ரயிலில் இந்த எட்டு டாங்குகளும் கொண்டு வரப்பட்டதாகவும், பரந்தனில் வைத்து இவை கடத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

ரயில் மறிக்கப்பட்டு இவை கடத்தப்பட்டதாக ஊர்ஜிதமற்ற முதலில் வந்த செய்திகள் தெரிவித்தன.

ரயில் பரந்தனில் நிறுத்தப்பட்டு எட்டு பெற்றோல டாங்குகளும் இறக்கப்பட்டதை யடுத்து இவைகளை இனம்

— 6 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன் 'கலவரத்தில்' ஏழு மாடுகள் படுகொலை!

காங்கேசன்துறையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றதாகக் கூறப்படும் "கலவர மொன்றினை" அடுத்து இடம் பெற்ற சூட்டுச்சம்பவத்தால் ஏழு மாடுகள் படுகொலை செய்யப்பட்டன.

கீரிமலை வீதியில் ஹாபர்வியூ ஹோட்டலுக்கும், சீமெந்துத் தொழிற்சாலைக்குமிடையே இனம் தெரியாதவர்கள் தாக்குதலுக்காகப் பதுங்கியிருப்பதாக நடமாட்டம் தென்பட்டதால் ஹோட்டலில் வசிப்பவர்கள் சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகங்களை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

பல மணித்தியாலங்களின் பின்னர் சம்பவம் நடைபெற்ற இடத்தில் சென்று பார்த்த போது. ஏழு மாடுகள் இறந்து கிடக்கக் காணப்பட்டனவாம்.

படையினர் எதிர்பார்த்த பெரும் தாக்குதலினால் ஏழு மாடுகளே அநியாயமாகப் பலியானதாக பொதுமக்கள் பேசிக்கொண்டனர்.

## ஐ. மாணவர் பேரவை வேண்டுகோள்

## ஜி. சி. ஈ. உயர் பரீட்சைக்கு ஒத்துழைப்பு வழங்குக!

(யாழ்ப்பாணம்)

விரைவில் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தர பரீட்சை ஒழுங்காக நடைபெற சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென ஐக்கிய மாணவர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது சம்பந்தமாகப் பேரவையின் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையொன்றில், எதிர்காலத்தில் எமது சமுதாயத்தில் ஓர் வரலாற்றைப் படைப்பவர்கள் இன்றைய மாணவ சமுதாயமே எத்த

— 6 ஆம் பக்கம் பார்க்க

## பொற்கோவிலில் இரு பகுதியினர் நேரடி மோதல்! லொங்கோவாலுக்கு கறுப்புக்கொடி காட்டினர்

பஞ்சாப் பொற்கோவிலில் அகாலிதள் கட்சி ஆதரவாளர்களும், எதிரானவர்களும் நேற்று மோதிக்கொண்டதாக பி. ரீ. ஐ. செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

அகாலிதள் தலைவர் லொங்கோவால் கூட்டம் ஒன்றில் பேசச் சென்ற சமயம் இந்த மோதல் இடம்பெற்றது. லொங்கோவாலுக்கு எதிராக கறுப்புக் கொடிகாட்டி சிலர் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் அங்கு துப்பாக்கிப் பிரயோகமும், வாள் சண்டைகளும் இடம்பெற்றன. இந்த மோதல்கள் சுமார் அரைமணி நேரம் இடம்பெற்றது இதில் பன்னிரண்டுபேர் காயமடைந்தனர்.

பாதுகாப்புப் படையினர் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

சில தினங்களுக்கு முன்பும் இப்பகுதியில் இடம்பெற்ற மோதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பஞ்சாபில் அமைதி நிலவி மீண்டும் தேர்தல் நடைபெற ஒத்துழைக்குமாறு பிரதமர் ராஜீவ் காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார். இங்கு தற்போது ஜனாதிபதியின் கீழ் மாநில ஆட்சி நடைபெறுகிறது,

## தமிழக நூல்கள் கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளது

தமிழ்நாடு அரசாங்கத்தால் யாழ். பொதுஜன நூலகத்திற்கென வழங்கப்பட்ட புத்தகங்களின் கண்காட்சி இன்று இறுதி நாளாக நல்லூர் இந்து விடுதியில் நடைபெறவுள்ளது. பெருமளவிலான மாணவர்களும், அறிஞர்களும், பொது மக்களும் ஏற்கனவே இக்கண்காட்சியைப் பார்வையிட்டுள்ளனர்.

இக்கண்காட்சியில் பல விலை உயர்ந்த, யாழ்ப்பாணத்திற்கு இதற்கு முன்னர் ஒரு போதுமே வந்திராத புத்தகங்களும் வைக்கப்பட்டுள்ளன

குழந்தைகளுக்கான புத்த

6 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். அபிவிருத்திச் சபை 26 உப-அலுவலகங்கள்

## 150 லட்ச ரூபா மின்சார சபைக்கு நிலுவை; மின்துண்டிப்பு ஏற்படுமென எச்சரிக்கை!

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கும் இருபத்தாறு உப அலுவலகங்களின் கீழுள்ள மின்பாவனையாளர்கள், நூற்றைம்பது லட்சம் ரூபாவை மின்கட்டண நிலுவையாகச் செலுத்த வேண்டியுள்ளதால், இலங்கை மின்சார சபை மின்துண்டிப்பு அறிவித்தலை அனுப்பியுள்ளது,

மின்பாவனையாளர்கள் தமது நிலுவையைச் செலுத்தாதிருப்பதால் யாழ். அபிவிருத்திச் சபை நூற்றுநாற்பது லட்சம் ரூபாவையும் உடனடியாகச் செலுத்தமுடியாதிருப்பதாக யாழ். அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலுவை உடனடியாகச் செலுத்தப்படாவிட்டால் இப்பிரதேசங்களின் மின்சார

... 6 ஆம் பக்கம் பார்க்க

## யுத்த நிறுத்த உடன்படிக்கை மீண்டும் மீறப்படுகிறதாம்

தீவிரவாதிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறிவருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக லங்கா புவத் நேற்று அறிவித்தது,

இதனால் இதுவரை ஐம்பது பேர் தீவிரவாதிகளினால் கொலைப்பட்டதாகவும், அதில் தமிழர்களே அதிகமானவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இருநூற்றி ஐம்பது கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் லங்கா புவத் மேலும் அறிவித்தது.

கடைசியாக கிடைத்த தகவல்களின்படி முல்லைத்தீவில்

—6ம் பக்கம் பார்க்க

## யாழ்தேவி புறப்படும் நேர மாற்றம்

யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் காலையில் கொழும்புக்கு யாழ்தேவி புறப்படும்

—6 ஆம் பக்கம் பார்க்க

## நேறறைய மரணதண்டனை

இளம்பெண்ணைக் கெடுத்து. அதன் மூலம் பிறந்த குழந்தையை கொலை செய்ததை குற்றச்சாட்டுகளின் பேரில் ஆறுகால்மடம், புது வீதிவாசிகளான பொன்னையா தீசன்

... 6 ஆம் பக்கம் பார்க்க

## கல்விப் பணிப்பாளர் மன்சூர் இன்று பாராட்டு பெறுகிறார்

கற்க வேண்டிய காலத்தே கற்றிட வேண்டும்; காலங் கடந்தும் கற்கலாம் என்றாலும் பசுமரத்து ஆணிபோல மனதிற் கல்வி பதிவதற்கு ஏற்ற காலம் இளமைக் காலமே.

இந்த இளமைக் காலத்தில் பள்ளிக் கூடத்தின் படிக்கட்டுகளைக் காணாத மக்கள் நிறைந்த இடங்கள்தான் முல்லைத்தீவு, கிளிநொச்சியாகும்.

வித்தியாலயங்கள் இல்லாதது ஒன்று; வித்தியாலயங்கள் இருந்தும் ஆசிரியர்கள் இல்லாதது இன்னொன்று ஆசிரியர்கள் இருந்தும் கற்றுக் கொள்ள முடியாதது வேறொன்று.

இப்படிப் பல்வேறுபட்ட காரணங்களால் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இவற்றைத் தீர்த்திடக் கூடிய வாய்ப்புக்கள் வசதிக்காகவே முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்கள் தனித்து இயங்குகின்றன. அதனால் பல நன்மைகளைப் பெற்றிடக்கூடிய நிலையில் அவை உள்ளன.

இவ்விரு மாவட்டங்களின் கல்வியதிபதியாக ஜனாப் எம். எம் மன்சூர் அவர்கள் இருக்கிறார். இதிலும் கிளிநொச்சி தனி மாவட்ட மானபொழுது அதன் முதற் கல்வி யதிபதியாக ஜனாப் மன்சூர் அவர்களே பொறுப்பேற்றார். தனது ஆற்றலாலும் சேவைத் திறமையாலும் இவ்விரு மாவட்டங்களுக்கிருக்கும் கஷ்டங்களை நீக்குவதில் கண்ணும் கருத்துமாக விளங்குகிறார்.

ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்பட்டு வருகின்றன. மூடிக் கிடந்த பாடசாலைகள் திறக்கப் படுகின்றன. தளபாடப் பிரச்சனைகளை நீக்கிட தளபாட ஆண்டாக இவ்வாண்டு பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக் கல்வி மாவட்டம் 1985இல் கஷ்டப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப் பட்டதால் இரு டாக்டர்களையும் கிளிநொச்சி பெற்றிடும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. ஒரே பாடசாலையிலிருந்து எட்டு மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்லக்கூடிய நிலையையும் பெற்றுள்ளது. இதற்கு மூலமாகமுன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரி அவர்கள் விளங்கினாலும் அதற்குப் பொறுப்பாகத் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்பவர் ஜனாப் மன்சூர் அவர்கள் ஆவார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகியவற்றின் கல்வித்துறை ஜனாப் மன்சூர் அவர்களால் அழகு பெற்றுள்ளது; மதிப்பை அடைந்துள்ளது; எழுச்சி கண்டுள்ளது.

● எஸ் ஏ. சி. சினனா

## சட்டவிரோத மின்பாவனை தந்த பரிசு

(சுழிபுரம்)

சட்ட விரோத மின்பாவனையாளரின் கவனயீனம் காரணமாக இளைஞர் ஒருவர் கடுமையான மின் தாக்குதலுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தெருவிற்குக் குறுக்காக எடுக்கப்பட்ட மின்சாரம் கடற்தொழிலுக்குச் சென்ற இளைஞரை தாக்கியது. இம்மின்சாரம் தந்திக் கம்பிமூலம் எடுக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பொன்னாலை நவீன குடியேற்றத் திட்டத்திற்கு அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றது. வீங்கேஸ்வரன் (20வயது) என்ற இவ் இளைஞர் அறிவிழந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

## குருபூசை

(சரசாலை)

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தை சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் கொண்டாடினர். மேற்படி வைபவத்திற்கு திரு. எல். நமசிவாயம் தலைமை வகித்தகர்.

## குரு பூர்ணிமா விழா

கோப்பாய் பழைய வீதி ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தில் இம்மாதம் முப்பத்தோராம் திகதி புதன்கிழமை பிற்பகல் மூன்றுமணிக்கு குரு பூர்ணிமா விழா நடைபெறவுள்ளது. விழாவிற்கான ஏற்பாடுகளை செயலாளர் பா. காரஷ் தனுமலாயன் கவனித்து வருகின்றார்.

## தென்னங்கன்று தாராளம்

(சித்தன்கேணி)

பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள தனிப்பட்ட விவசாயிகளிடம் போதியளவு தென்னங்கன்றுகளும் செவ்விளநீர்க் கன்றுகளும் விற்பனைக்கு இருப்பதாகவும் இவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் திரு. ரி. ஜி. ரி. சோமநாதர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வெள்ளரிப் பழ சீசன்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் இந்த ஆண்டு வெள்ளரிப்பழம் அறுவடை வழமையை விட அதிகமாகவுள்ளதன் காரணமாக வெள்ளரிப் பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

தினமும் வெடித்துப் பிழந்த வெள்ளரிப் பழங்கள் நூற்றுக் கணக்கில் சந்தையில் வந்து குவிந்திருக்கின்றன. ஆனால் விலையோ மிகமலிவு.




※ பூநகரி, ஞானிமடம்மேற்கு பாஸ்கரன் நற்குணவதி தம்பதிகளின் மகன் டயான இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ இமையாணன், இராசலிங்கம் மனோரானி தம்பதிகளின் மகன் மோகனராஜ் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ புலோலி மேற்கு, தேவராசா குவீனி தம்பதிகளின் மகன் சாமுவேல் தேவதயாளன் இன்று தனது பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ அல்வாய் தெற்கு, சந்திரன் புவிராணி தம்பதிகளின் மகள் ஷர்மிளா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ கொக்குவில் மேற்கு, அரியரட்ணம் ஜெயலட்சுமி தம்பதிகளின் மகள் அகிலா இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ உடுவில் மேற்கு, குமரகுருபரன் திலிமலர் தம்பதிகளின் மகன் மோகனரூபன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## இறுதி அஞ்சலி

(சித்தன்கேணி)

சங்கானைக் கிராமத்தின் வரலாற்றிலே நீங்காத நினைவுடையவராகத் திகழ்ந்த பெருமை அமரர் பேராசான் திரு. சீ. க. பேரம்பலத்துக்கே உரியது. அமரர் பேரம்பலம் ஆசிரியர் இக்கிராமத்தின் சகலதுறை வளர்ச்சிகளுக்கும் தன்னாலான சிறந்த- பாராட்டத்தக்க பணிகளைச் செய்திருக்கின்றார். இவரது இழப்பு சங்கானை மக்களுக்கு மாத்திரமன்றி தமிழ் பேசும் சகல மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்."

அமரத்துவமடைந்த அமரர் பேராசான் சீ. க. பேரம்பலத்தின் இறுதிக்கிரியையின் போது சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தொழிலாளர் சார்பில் இரங்கலுரை நிகழ்த்திய தொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பொதுச் செயலாளர் திரு. எஸ். இராசதுரை மேற்கண்டவாறு கூறினார்.

## கருத்தரங்கில் டானியல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள நலன்புரிக் கழகம் மாதாந்த கருத்தரங்குகளை நடாத்தி வருகிறது.

இந்த வரிசையில் எதிர்வரும் 2-ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ள கருத்தரங்கில், "இன்றைய எழுத்தாளன்" என்ற தலைப்பில் பிரபல நாவலாசிரியர் கே. டானியல் உரையாற்றவுள்ளார்.

## நன்கொடை

(யாழ்ப்பாணம்)

அகில உலக தரிசன இயக்கத்தினர் உமையாள்புரம் மக்களின் வறுமையை நீக்கக் கடந்த பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களுக்கு முறையே 16950 ரூபா, 8000 ரூபா, 10800 ரூபா என நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

மேலும் கடனுதவியாக ஓராண்டிற்குக் கோழி வளர்ப்பிற்கு 350 ரூபாவும் ஆடு வளர்ப்பதற்கு 500 ரூபாவும் கடற்றொழில் உபகரணக் கொள்வனவிற்கு 750 ரூபாவும், சிறுவியாபாரத்திற்கு 500 ரூபாவும் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாகப் வழங்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


"யாழ் லைற் சோப் வந்ததிலிருந்து,

சலவை செய்யும் வேலை எனக்கு ஒரு சுமையாக இல்லை. துணிகளுக்கு தூய வெண்மை தருவதோடு, அது கைகளுக்கும் இதமாக இருக்கிறது. அதேவேளை, விலையும் குறைவாக உள்ளது."

புதிய யாழ் லைற் குடும்பப் பெண்களின் உற்ற துணை.




★ மின்னுவதெல்லாம் பொன்னல்ல நீங்கள் வாங்குவதெல்லாம் சோப்பல்ல, சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்தி, விஞ்ஞான முறைப்படி, உயர்ந்த தரத்தில் தயாரிக்கப்படுவது "யாழ் லைற்". அதில் மிருகக் கொழுப்பு பயன்படுத்தப்படுவதில்லை.

★ யாழ் லைற் சோப் விரைவில் நுரைக்கும் ஆடையின் அழுக்கை வேகமாக அகற்றும். குறைந்த செலவில் அதிக ஆடைகளை சலவை செய்யலாம். கைகளுக்கும், ஆடைகளுக்கும் தீங்கற்றது.

★ யாழ் லைற் உயர்தரமான சோப், 130 கிராம் எடை கொண்டது, ஏனைய சோப்களைவிட விலையில் மட்டுமே குறைவானது.
நீங்களே பரீட்சித்துப் பார்த்து உண்மையைக் காணுங்கள்

★ சில்லறை விலை ரூ. 3/25
தொழிற்சாலைக்கு வந்து தொகையாகப் பெறுபவர்களுக்கான
விசேட விலை ரூ. 2/75

Large Orders executed promptly. First come first served. Please Hurry.
Office hours: Weekdays 9 a.m—4 p.m.
Weekends 9 a.m—11 a.m.

YARL LIGHT

The Obvious Choice of the Housewife Today

உற்பத்தியாளர்கள்: யாழ் லைற் றேடிங்ஸ்
சிவன் ஒழுங்கை, ஆவரங்கால்.

Dyn Ads.

ஈழமுரசு



புகையிரத நிலைய

# வசூல் பணம் சேகரிப்புக்கு நிலைய அதிபர்கள் ஆட்சேபம்

(மிருசுவில்)

வட பகுதியிலுள்ள உப புகையிரத நிலையங்களில் சேகரிக்கப்படும் வசூல் பணத்தை புகையிரத கணக்காளர் பிரிவிற்கு செலுத்துவதற்கு புகையிரதப் பகுதி தற்போது நடைமுறைப்படுத்தியுள்ள புதிய ஏற்பாட்டை இங்குள்ள உப புகையிரத நிலைய அதிபர்கள் வன்மையாக எதிர்த்துள்ளனர்.

முன்னர் வசூல் பணம் அந்தந்த உப புகையிரத நிலையங்களிலேயே வைத்து புகையிரதங்களில் ஒப்படைக்கப்பட்டு வந்தது. ஆனால் புதிய ஏற்பாட்டின்படி தத்தமது நிலையங்களில் சேகரிக்கப்படும் பணத்தை உப புகையிரத நிலைய அதிபர்கள் தமக்கு அண்மையிலுள்ள பிரதான புகையிரத நிலையத்தில் வைத்து தினமும் யாழ்தேவி புகையிரதத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இப் புதிய நடைமுறையின்படி உப புகையிரத நிலையத்திலிருந்து புகையிரத நிலையத்திற்கு பணத்தை எடுத்துச் செல்வதில் பாதுகாப்புப் பிரச்சினைகளுடன் போக்குவரத்துப் பிரச்சினையையும் எதிர்நோக்க வேண்டியுள்ளதினால் இப்புதிய நடைமுறையை வடபகுதி உப புகையிரத நிலைய அதிபர்கள் சங்கம் எதிர்ப்பதாகவும், மீண்டும் பழைய நடைமுறையை பின்பற்றாவிடின் தொழிற்சங்க ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசிக்கப்படுவதாகவும் மேற்படி சங்க முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

# ஆளுமையெனப்படுவது ஆண்களுக்குமட்டும் உரியதல்ல; பெண்களுக்கும் உரியதாகும்!

## கிளிநொச்சி மகளிர் விழாவில் உரை

(சரசாலை)

சர்வதேச இளைஞர் ஆண்டை முன்னிட்டு கடந்த வாரத்தை கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மகளிர் வாரமாக பிரகடனப்படுத்தியது. அதையொட்டிய கருத்தரங்கு திருநகர் இளந்தளிர் இளைஞர் நிலையத்தில் அதன் தலைவர் செல்வன். மா. பாஸ்கரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான இளைஞர் சேவை அலுவலர் திரு. கு. பரராஜசேகரம் தனதுரையில் கீழைத்தேச நாகரிகத்தில் பெண்களுக்குரிய சமஅந்தஸ்து என்பது புதுமையான விடயமல்ல என்றும் அதற்கு ஆண்பாதி பெண்பாதி என்ற அர்த்த நாரீஸ்வரர் பற்றிய கடவுள் தத்துவம் சான்று பகர்கின்றது என்றும் சொன்னார்.

விழாவில் சிறப்புரையாற்றிய கிளிநொச்சி கச்சேரி திட்டமிடல் அதிகாரி திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் தனதுரையில், பெண்ணடிமை நீக்கல் என்னும் விடயம் பற்றி குறிப்பிடுகையில் ஆளுமை என்பது ஆண்களுக்கு மட்டும் உரியதல்ல இதற்கு பிரிட்டன் பிரதமர் மாக்கிரட் தட்சர், இந்திய மறைந்த பிரதமர் இந்திரா காந்தி ஆகியோரின் வாழ்க்கை சான்றாகும் என்று தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சுவிஸ் போன்ற நாடுகளில் ஹோட்டல்களில் அறைகள் வாடகைக்கு விடும்போது முன்பின் அறிமுகமில்லாத ஆண் பெண்கள் ஒரே அறையில் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். அதனை அந்த நாட்டின் நாகரிகம் அங்கீகரிக்கின்றது. ஆனால் நமது கலாசாரத்தில் அது அங்கீகரிக்கப்படமுடியாதது. ஆண்களைப் போல் உடையணிவதும் ஒன்றாகத் திரிவதும் சமத்துவமென்று சொல்ல முடியாது குடும்பம் சார்ந்த விடயங்களில் சமூகம் சார்ந்த விடயங்களிலும் உலகவிடயங்களிலும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் மகளிருக்கு இருக்கின்ற உரிமைகளே உண்மையான சமத்துவமானதாகும் என்றார்.

திருநகர் மாதர் சங்கத் தலைவி - திருமதி சோமசேகரம் பிள்ளை, செளக்கிய மாது திருமதி இராசரத்தினம், திருமதி பெர்னாண்டோ. செல்வி இ. கலையரசி ஆகியோரும் உரை வழங்கினர்.

# உயிர் காக்கும் பணியே உலகில் மிகப் பெரும் பணி!

(மருதங்கேணி)

"ஒருவனுக்குப் பணத்தை அள்ளிக் கொடுப்பது பெரிதல்ல; பொருளை அள்ளிக் கொடுப்பது பெரிதல்ல; உயிரைக் கொடுப்பதுதான் பெரிய பணியாகும்."

இவ்வாறு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் மாவட்ட ஆணையாளர் நபோஜன் முள்ளியான் முதலுதவிச் சிகிச்சை நிலையத்திற்கு விஜயம் செய்தபோது தமக்களிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தம் உரையில், இதுவரை இங்கு ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்டோர் வந்து முதலுதவிச் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பதை அறியும்போது ஆஸ்பத்திரியில்லாத கிராமப் புறங்களில் எமது முதலுதவி நிலையங்கள் எவ்வளவு பெரிய சேவையை ஆற்றுகின்றன என்பதற்கு முள்ளியான் முதலுதவி நிலையம் ஓர் சிறந்த உதாரணமாகும் என்றார்.

# தென்மராட்சி மத்தியில் தனியான சமாதான சபை

(சாவகச்சேரி)

தென்மராட்சி மத்திக்கான ஒரு மத்திய சமாதான சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இது சாவகச்சேரி நகர சபைக்கும், கிராமோதய சபைக்கும் மத்தியிலுள்ள பத்து இணக்க சபைகளினதும் மத்திய சமாதான சபையாகும்.

இப்பத்து இணக்க சபைகளிலும் தீர்க்க முடியாத, அல்லது இணக்க சபைகளின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாவிடில் இந்த மத்திய சமாதான சபைக்கு முறையீடு செய்யப்படும்.

இம்மேன்முறையீட்டு மத்திய சமாதான சபையின் தலைவராக முன்னாள் அதிபர் பண்டிதர் செ. சிவலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் செயலாளராக திரு. அ. பேரம்பலமும், மற்றும் அதிபர் திரு. த. காசிநாதன், டாக்டர் பி. பிலிப்ஸ், திரு. சதாநடராஜா ஆகியோர் உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## விநாயகர் மகோற்சவம்

(வண்ணார்பண்ணை)

யாழ். வண்ணார்பண்ணை கடைத்தெரு - வேம்படி சித்தி விநாயகப் பெருமான் வருடாந்த மகோற்சவம் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது. அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி வியாழக்கிழமை காலை வசந்த மண்டப பூஜையும், பதினாறும் திகதி வெள்ளிக்கிழமை காலை ஏழு மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## நியமனம்

(கொடிகாமம்)

தென்மராட்சி அரசாங்க அதிபர் காரியாலய நிர்வாக அதிகாரியாக திரு. எம். ஞானசேகரன் நியமனம் பெற்றுள்ளார். இவர் மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா கச்சேரிகளில் பதினைந்து வருடங்களுக்கு மேலாக நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றியுள்ளார்.

அஞ்சலிக் கூட்டத்தில் புகழாரம்

# சைவ சமயத்தையும் கலாசாரத்தையும் துலங்கச் செய்தவர் மெய்கண்டான் அதிபர்

(சுழிபுரம்)

"சைவ சமயத்தைப் பொறுத்தவரையில் நூல் வெளியீடுகளுக்கு தென்னாட்டில் ஏராளமான அச்சுக் கூடங்களும், பதிப்பகங்களும் உண்டு. ஆனால் எமது நாட்டிலுள்ள ஒரே தொழிற் கூடம் மெய்கண்டானே. சைவ சமயத்தையும், தமிழ்க்கலாசாரத்தையும் துலங்கச் செய்வதில் மெய்கண்டானை இயக்கியவர் இரத்தினசபாபதி. பௌத்த கோயில்களில் "பிரிவேனா" என்ற புத்த மதப் பாடசாலைகள் ஆற்றும் சமய மொழித் தொண்டுகளைப் போல, சைவாலயங்களிலும் இந்துப் பாடசாலைகளை அமைத்து எம் இளைய தலைமுறையினர்க்கு சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் போதிக்க வேண்டுமென்ற பேரவாக் கொண்டு அதற்கான முயற்சிகளை எடுத்து வந்தவர் அமரர் திரு. நா. இரத்தினசபாபதி. அன்னாரின் இந்தக் கனவை நனவாக்குவதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலி."

இவ்வாறு காலஞ் சென்ற மெய்கண்டான் நிறுவன அதிபர் திரு. நா. இரத்தினசபாபதி அவர்களின் மறைவு குறித்து, பண்டத்தரிப்பு காலையடி கந்தசாமி கோயிலில் நடைபெற்ற அஞ்சலி விழாவிற் கலந்து கொண்டு பேசிய பண்டிதர் திரு. க. மயில்வாகனன் கூறினார்.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற மேற்படி விழாவில் திரு. இரத்தினசபாபதியின் நினைவுமலரை வெளியிட்டு வைத்து பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்கள் பேசினார்.

விழாவிற்குத் தலைமை வகித்த புலவர் கா. வேல்முருகன் தமது உரையில், விருந்தோம்பலிலும், உபசரணைகளிலும் சிறந்த பண்பாளன். வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்திற்கும், வடக்கம்பரை பஜனைச் சபைக்கும் மற்றும் பல சமய சமூக தொண்டுகளுக்கும் வாரி வழங்கியதுமன்றி சலுகை ரீதியில் புத்தகங்களையும், பிரசுரங்களையும் அச்சிட்டுக் கொடுத்தவர்" என்றார்.

புலவர் நா. சிவபாதசுந்தரனார் தமது உரையில் சமயத்திற்கும், நாவலர் சிலையமைப்பதற்கும் இரத்தினசபாபதி அவர்கள் ஆற்றிய பணியைப் பாராட்டிப் பேசினார்.

யோகி க. கார்த்திகேசு, க. சண்முகரத்தினசர்மா, பண்டிதர் ஆறுமுகம், க. வாமதேவன், கே. நடராஜா, பண்டிதை பொன் பாக்கியம், சி. சண்முகசுந்தர சர்மா ஆகியோரும் பேசினர்.

# வேரவில் கலவன் பாடசாலை பாராட்டைப் பெற்றது!

"வேரவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி, முன்னணி வகிக்கும் பாடசாலைகளின் தரத்துக்கு ஒப்பானதாகக் காணப்படுகிறது." இவ்வாறு கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம். எம் மன்சூர் மேற்படி பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

விழாவிற்கு அதிபர் தி. கணபதிப்பிள்ளை தலைமை தாங்கினார். விசேட விருந்தினர்களாக பரந்தன் வட்டாரக் கல்வியதிகாரி நா. தணிகாசலம்பிள்ளை, கிளிநொச்சி வட்டாரக் கல்வியதிகாரி ஜனாப் இனுசா, இரணைதீவு பங்குத் தந்தை வண. பிதா கொன்சாலசு ஆகியோர் கலந்து கொண்டனர் முதலாம், இரண்டாம் மூன்றும் இடங்களை முறையே இளங்கோ, கம்பர், பாரதி ஆகிய இல்லங்கள் பெற்றுக் கொண்டன.

## இருபாலை பஸ் சேவை நடத்தக் கோரிக்கை

(இருபாலை)

நாட்டில் ஏற்பட்ட வன்முறைகள், பஸ் எரிப்புகள் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த 814 இலக்கமுடைய இருபாலை ஆனைக்கோட்டை பஸ் சேவையை மீண்டும் உடனடியாக ஆரம்பிக்கும்படி இருபாலை கிழக்கு பிரஜைகள் குழுவினர் வட பிராந்திய போக்குவரத்து சபைத் தலைவரிடம் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இச்சேவையை உடன் ஆரம்பிக்கும் பட்சத்தில், இவ்விடத்துப் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பயனடைவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## கொடையால் வாழ்வில் சிறப்பு

(சுழிபுரம்)

"கொடையே மனிதனின் வாழ்வில் சிறப்பைத்தருவது. கொடுத்தார்க்குக் குறைவில்லை. என்ற பழமொழிக்கொப்ப வாழ்ந்து காட்டியவர் காலஞ் சென்ற மெய்கண்டான் இரத்தினசபாபதி" என்று சுழிபுரம் பறுளை சிவசுப்ரமணிய சுவாமி கோவில் அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் மறைந்த திரு. இரத்தினசபாபதிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டபோது சபைத் தலைவர் திரு. ஆ. இராசபட்சம் பேசுகையில் கூறினார்.


பெற்று எசன்ஸ் சப்ளையேர்ஸ்

PETTAH ESSENCE SUPPLIERS

பேக்கரி தயாரிப்புகள்,
பிஸ்கட், ரொபி, இனிப்பு, குளிர்பானம்,
ஐஸ்கிறீம், சிற்றுண்டி வகைகளுக்கான சகலவிதமான
எசன்ஸ், கலர்ப்பவுடர், கேக் தயாரிப்புக்குத் தேவையான
சகல பொருட்களுக்கும்

- ஊதுபத்தி
- சாம்பிராணி
- விளைவு சூடம்
- ரல்கம் பவுடர்
- வெள்ளை மஞ்சள் வசலின்
- வாசனைத்திரவிய எண்ணெய்
- ஓடிக்கொலோன்

ஆகியவை தயாரிப்பதற்கான உற்பத்திப் பொருட்களும்
ஏனைய இதர

- பேப்பர் வகை
- பொக்ஸ்போட்
- காட்போட்
- ஆர்ட்போட்
- நியூஸ்பேப்பர்
- ஒயில் பேப்பர்
- பிறவுண் பேப்பர்
- ரிசு பேப்பர்
- சலப்பின்

மற்றும் எல்லா பொலித்தீன் வகைகளுக்கும்
அச்சகங்கட்குத் தேவையான
சகல மை வகைகளுக்கும்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பெற்ற ஸ்தாபனத்திற்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்!

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

223, Power House Road, Jaffna.

### உதய சிந்தனை

அறிவாற்றலுள்ள மனிதன் நற்குணத்தையும் பெற்றிருக்க வேண்டும். இல்லாவிட்டால் பயனில்லை.

--ஆங்கிலப் பழமொழி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

# இதய ஒலி

31-7-1985 புதன்கிழமை (குரோதன ஆடி 16)

## யானைப் பாகனின் தலையாய கடமை!

இந்தக் குட்டித்தீவின் தென்புறத்தே நடைபெறும் வைபவங்களில் கலந்துகொள்ளும் அமைச்சர்களும், அரசியல் வாதிகளும் நிகழ்த்தும் உரைகள் மக்கள் மத்தியில் பயப்பிராந்தியை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

போதாக்குறைக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆயுதப் படையினர் நடந்து கொள்ளும் விதமும், உருவாக்கப்படும் பயத்திற்கு தூபமிடுவதாக அமைந்து வருகின்றது.

பிரதம அமைச்சரைத்தவிர, மிகுதி அமைச்சர்களில் மூன்று பேர் மட்டுமே இனப்பிரச்சினை பற்றி தாம் அடிக்கடி கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் தவறாமல் பிரஸ்தாபிப்பவர்களாவர்.

நிதி அமைச்சர் றொனி டி மெல், தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி, வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் ஆகியோரே சம்பந்தப்பட்ட மூவருமாவர்.

நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான பணத்தை ஆயுதங்கள் கொள்முதல் செய்வதற்கு வழங்க வேண்டியவராகையால் நிதி அமைச்சர் இதனைப் பற்றிப் பேசுவதில் தவறில்லை.

முப்படைகளுக்கும், பொலிஸ் நிர்வாகத்திற்கும் பொறுப்பானவர் என்ற வகையில் தேசியபந்தோபஸ்து அமைச்சர் இதனைப்பற்றிப் பேசுவதற்குத் தகுதியுடையவர்.

வெளிநாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம் உள்நாட்டு "வண்டவாளங்கள்" தண்டவாளத்தில் ஏறுவதைப் பார்வையிடும் துர்ப்பாக்கியம் பெற்று, அவைகளுக்குப் பதிலிறுக்க வேண்டிய பொறுப்புள்ளதால் வெளி விவகார அமைச்சர் இதனைப்பற்றிப் பேசுவது தவிர்க்க முடியாதது.

ஆனால் மூவருடைய பேச்சும் மூன்று கோணங்களில் அமைவதால் அச்சத்தாலும், அதே வேளை வீரத்தாலும் ஒரு இனம் திக்குமுக்காடி அவஸ்தைக்குள்ளாகிவிடுமோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

உலகெங்குமுள்ள ஆறு கோடி தமிழருடன், ஒரு கோடி சிங்களவரால் போராடி வெற்றி பெற முடியுமா என்று கேட்கிறார் ஒரு அமைச்சர்.

ஆயுதப் படைகளின் சக்தியை எதிர் கொள்ளமுடியாமல், தீவிரவாதிகள் பூட்டானில் செல்லச் சம்மதித்தனர் என்கிறார் மற்றொரு அமைச்சர்.

இலங்கையில் அநியாயப் படுகொலைகள் நடைபெறவில்லை. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்கிறார் இன்னொரு அமைச்சர்.

இவைகளுக்கிடையே, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை தீவிரவாதிகள் மீறி நடக்கின்றனர். ஆனால் ஆயுதப்படைகள் அதனை மீறாது நடந்து வருகின்றனர் என்று சொல்கிறது அரசாங்க அறிக்கை.

பொலிகண்டி, காரைநகருக்குப் பின்னர் நேற்று முன் தினம் வவுனியாவில் என்ன நடந்தது?

இது யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு உட்பட்ட துப்பாக்கிச் சூடா?

ஆயுதங்களைக் கீழே வைப்பது என்ற பின்னர், அவைகளையும் ஏந்திக்கொண்டு வீதிபவனி எதற்காக?

"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான்..." என்ற நிலையை இங்கு நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளும், ஒரு பக்கச் சார்பான அரசாங்க அறிக்கைகளும், விட்டுவிட்டு நடத்தப்படும் சூட்டுச் சம்பவங்களும் ஏற்படுத்திவிடுமோ என்பதுதான் அனைவருக்கும் மீண்டும் ஏற்பட்டுவரும் அச்சமாகும்.

கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கம் சென்னையில் தெரிவித்தது போல, பஞ்சாப் பிரச்சினையைத் தீர்ப்பதில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்திக்கிருந்த உறுதியும், ராஜதந்திரமும், இலங்கை அரசின் தலைவருக்கும் ஏற்பட்டால் மட்டுமே, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

யானையைத் தடவிய குருடர்களாக அரசாங்கத்தைச் சார்ந்த பலரும், பலதைச் சொல்லலாம்.

ஆனால் யானைப்பாகன் அவ்வாறு நடந்து கொள்ள முடியாது!

நாற்பதாண்டு கால அரசியல் வாழ்வில் பழுத்து முதிர்ந்த அதி உத்தம ஜனாதிபதி அவர்களே, அரசாங்கம் என்ற யானையின் பாகனாக விளங்குபவர்.

எனவே மெத்தக்கவனமாகவும் நிதானமாகவும் பிரச்சினையைத் தீர்க்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்!

இந்திய பத்திரிகையாளர் பகவன் ஆர். சிங் "த வீக்" சஞ்சிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.

# யாழ்ப்பாண மரணங்கள் இரு வகையைச் சேர்ந்தவை

**யாழ்ப்பாண யாத்திரை 8**

வியாழனும் வெள்ளியும் முக்கியமான சிலரை நான் கண்டு அளவளாவினேன். அரச அலுவலர்கள், சில யாழ். குடாநாட்டுப் பிரமுகர்கள் ஆகியோர் அவர்களுள் அடங்குவர். இக்குடாநாட்டில் நான் அத்தருணம் தங்கியிருப்பது அவர்கள் வாயிலாக எப்படியோ இராணுவத்தினருக்குத் தெரிய வந்துவிடுமோ என உள்ளூர ஓர் அச்சமும் என்னை அரித்துத் தின்றுகொண்டிருந்தது. அது ஒருபுறம் இருக்க, மறுபுறம், ஞாயிற்றுக் கிழமையன்று நான் இந்திய மண்ணில் மறுபடியும் மிதிக்க வேண்டியிருந்தேன். அதில் தடங்கலோ தாமதமோ நேர்ந்தால், சென்னையில் அது மனக் கலவரத்தையும், யாழ்ப்பாணத்தில் சில பிரதியுணர்வுகளையும் தோற்றுவிக்க இடமிருந்தது. துர்ப்பாக்கியவசமாக, சென்னையுடன் தொடர்பு கொள்ளவோ, சென்னைக்குச் செய்தி அனுப்பவோ எனக்கு எதுவித வழியும் இல்லாதிருந்தது. பகலெல்லாம் மீனவர்களுடன் சென்று நான் சம்பாஷிப்பேன். இரவில், படுக்கைக்குப் போனாலும் நித்திரை வருவதாகக் காணோம். குருநகர் இராணுவ முகாம் அங்கிருந்து ஐந்து மைல்கள் தொலைவு தானுமிராது. அங்கே இடையிடையே இரவு பூராவும் தீர்க்கப்படும் பூம்-பூம் எனும் பெருவெடிச் சத்தங்களைக் கேட்ட வண்ணம் நான் படுக்கையில் துயிலறியாது புரண்டு புரண்டு கொண்டிருப்பேன்.

"அதிர்ஷ்டக் குறைவான" வெள்ளிக்கிழமையும் ஒருவாறு கடந்து விடவே, சனிக்கிழமையாவது நாம் புறப்படலாமென்றால்.... அன்று முழுமையும், முன்னரே பழுதாகி, ஒழுங்காகத் தொழிற்பட மறுத்த, மோட்டார் இயந்திரத்திற்கு அவசியமான உதிரிப்பாகங்கள் தேடுவதிற் கழிந்தது. அதற்கும் தடங்கலாக, பட்டினம் எங்கும் இராணுவத்தினர் ரோந்து புரிந்து வந்தனர் என நாங்கள் அறிய வந்தோம். ஆகவே, ஞாயிற்றுக் கிழமை காலையும் உதிரிப்பாக வேட்டை தொடர்ந்தது. அன்று மத்தியானம் ஆன போது கொயில்ஸ் எனப்படும் கம்பிச் சுருள்கள் கிடைத்து விட்டன. தற்போது அடுத்த கட்டம் ஆரம்பமாயிற்று புதிய உதிரிப் பாகங்களைப்பொருத்திப் பழுது பார்க்கும் பணி. எனது அமைதியின்மையை ஒருவேளை அவதானித்தசுபாஸ், 'வருவது வரட்டும். நாங்கள் இன்று (ஞாயிறு) இரவு புறப்பட்டே தீருவோம்,' என உறுதிபூண்டார். தேவை ஏற்பட்டால், நீந்தியாவது இந்தியா போய்ச் சேருவோம். என்றேன் நான், ஒரு ஈனமான புன்முறுவலுடன். அதற்கு அவர் எனக்களித்த தறுகுறும்பான விடை இதோ: அதற்கு மூன்று நாட்கள் பிடிக்கும் நீரினுள் அமிழ்ந்தி இறக்க ஐந்து நிமிடமும், உங்களுடைய சடலம் இந்த சமுத்திர அலைகள் மீது மிதந்து அக்கரை போய்ச்சேர, எஞ்சிய நேரமும்."

※

அவள் விதவையாகிச் சில மாதங்களாகிவிட்டன. லக்ஷ்மிக்கு வயது ஐம்பத்திரண்டு; அரச சேவையிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் அவளுடைய கணவனார் ஒய்வு பெற்று யாழ்ப்பாணம் மீண்டிருந்தார். ஆனால் நீரிழிவு நோயாளியாகிய அவரால், கொடுமையானதாகிப் போய் விட்ட அவரது சொந்த ஊர் வாழ்க்கைக்குத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. விபரமாகச் சொல்லப்போனால், அவருடைய மகன்மார் மூவரில், ஒருவரை இலங்கை அரசின் இராணுவப்படையினர் பிடித்துக்கொண்டு போய்விட, எஞ்சிய இருவரும் அதேகதி தமக்கும் நேர்ந்துவிடாது இருப்பதற்காக, ஊர்துறைய, ஒளித்து வாழ, வேண்டியதாயிற்று.

தனது புருஷனுடைய சாவுடன் தொடர்பு உடைய சமய மரபுச் சடங்கொன்றிற்கு அவள் தன்னுடைய இனசனங்களை அழைக்க விரும்பினாள். சந்திக்குக் கிட்ட ஒரு தபாற் கந்தோர்; ஓர் அரை கிலோமீட்டர் தொலைவில் உப-தபாற் கந்தோர், என்றெல்லாம் ஏதோ உண்டுதான், ஆனால் அவற்றால் பயன் இல்லை. அவற்றில் இடப்பட்ட திருமுகங்கள் (கடிதங்கள்) உரிய நேரத்திற் போய்ச் சேரும் என்றோ, ஏன், உரியவர்களிடம் பக்குவமாகக் கையளிக்கப்படு மென்றுதானும், எத்தகைய நிச்சயமும் கிடையாது. சரியான முகவரியாளர்களிடம் அவை சென்றடைய வேண்டுமானால், அவள் பிரதான யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகம் (பெரிய தபாற் கந்தோர்) செல்ல வேண்டியிருந்தது. ஆனால், அந்தத் தபாற் கந்தோருக்கு, அவ்வளவு தூரமும், பாவம், அவள் கால் நடையாகவே சென்றாக வேண்டும். ஏனென்றால், போக்குவரத்துச் சேவைகளை அரசாங்கம் மட்டுப்படுத்தியிருந்தது. விதவையாகித் தனித்துப்போன அவள், தன் கணவரின் நிழற்படத்திற்கு முன்னால் ஒரு விளக்கேற்றி வைத்தாள்; மனப்பாரம் தீரும்வரை ஒப்பாரி வைத்து அழுதாள். அவளால் நிறைவேற்ற முடிந்த சமய பாரம்பரியச் சடங்கு அவ்வளவுதான்.

யாழ்ப்பாணத்தில் வாழ்வது வாழ்வில் மரணம் ஆகும். யாழ். நகருக்குக் கிட்ட, கட்டைப்பிராய் கிராமத்தில் கிடுகினால் வேயப்பெற்ற குடில் ஒன்றினுள் பாலகன் ஒன்று "வீல் வீல்" என வீரிட்டு அழுதுகொண்டிருப்பது கேட்டது. வலி ஒருபுறம், பசி மறுபுறம், மனக்குழப்பம் இன்னுமொருபுறமாக வேதனைப்படுத்த, அந்தப் பச்சிளம் குழந்தையால் வேறு என்னதான் செய்ய இயலும்? அதன் பாட்டி அப்பொழுதுதான் அதனை நன்றாக அடி அடியென்று அடித்துக் கைபோய்ந்திருந்தாள். கைக்குழந்தையின் பசியைத் தணித்தற்குத்தானும் உணவு அளிக்கத் தன்னால் இயலவில்லையே என்ற ஆற்றொணாக் கொடுமையால், தன்மீதும் உலகத்தவர் எல்

...5 ஆம் பக்கம் பார்க்க

உ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

அருளிச் செய்த

## கோளறு பதிகம்

(ஒன்பதாவது பாடல்)

பலபல வேடம் ஆகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெ ருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர் மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபலவான திருவுருவங்களோடு கூடிய பரமரும் பெண்ணொருபாகரும் விடையை ஊர்கின்ற அடியோங்களது மேலோருமாகிய இறைவர் கங்கை நங்கையோருடன் எருக்கு மலரையும் திருமுடியிற்றரித்து அடியேனது உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தால் தாமரை மலர் மேலிருப்பவராகிய நான்முகத் தேவரும் காத்தற் கடவுளும், வேதங்களோடு பிறதேவர்களும் சுழன்று வரும் காலமும் அலைகின்ற கடலும், மேரு மலையும் ஆகிய எல்லாமும் திருத்தொண்டர்களுக்கு அதிகமாக நல்லன, அவைகள் நல்லன நல்லன என்றவாறு.

இத் திருப்பாட்டால் திருமால் நான்முகன் முதலிய தேவர்களும் கடல் முதலியவும் நல்லனவாகுமென்று கூறப்பட்டன.

திருச்சிற்றம்பலம்.

★ சர்வதேச கவனம் ஈர்க்கும் ரஷ்யாவின் அறிவிப்பு

# வருடம் முடியும்வரை சகல அணு ஆயுத ஆய்வும் தடை

(மாஸ்கோ)

இவ்வருடம் முடியும் வரை தனது அணு ஆயுதச் சோதனைகள் யாவற்றையும் முற்றாகத் தடை செய்யப்போவதாக அகில உலகினதும் கவனத்தை ஈர்க்கும் அறிவிப்பு ஒன்றினைச் சோவியத் யூனியன் வெளியிட்டுள்ளது. ஆகஸ்ட் மாதம் ஆறும் திகதி முதல் செயற்படுத்தப்படும் இத்திட்டம், அமெரிக்காவும் ஒத்துழைப்பு நல்குமேயானால் அடுத்த வருடத்திற்கும் தொடரும் நிலை உருவாகும் என்று சோவியத் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. கொர்பசெவ் தெரிவித்துள்ளார். மாஸ்கோ தொலைக்காட்சியில் இவ்வறிப்பை வெளியிட்ட அவர் அமெரிக்காவும் இது விடயத்தில் தம்முடன் அனுகூலமான விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்று அமெரிக்காவுக்குக் கோரிக்கை விடுத்தார்.

ஆனால் இக்கோரிக்கை தமக்கு உடன்பாடானதல்ல என அமெரிக்கா கூறி நிராகரித்து விட்டது.

நேரிலறியா இவ்விடயங்களில் சுலபத்தில் இணக்கம் கண்டு விடமுடியாது என அமெரிக்கத் இராஜாங்க அமைச்சர் திரு. சூல்ட்ஸ் தெரிவித்தார்.

சோவியத் கம்யூனிஸ்ட் தலைவரின் அறிவிப்புக்கு முன், நிலத்துக்கடியிலான தமது நாட்டின் அணு ஆயுத சோதனைகளை பார்வையிட வருமாறு அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனல்ட் றீகன் சோவியத் யூனியனுக்கு அழைப்பு விடுத்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண...

...4ஆம் பக்கத் தொடர்

லார் மீதும் பொங்கிய தனது வயிற்றெரிச்சலை, மூட்டி இப்படிக் கொட்டித் தீர்த்துக் கொண்டாள்.

அவளுடைய மகன் சேகரின், குழந்தை அது, 1984 டிசெம்பர் மாதம் பதினெட்டாந் திகதி அவனும் வேறு இரண்டு மனிதரும் சுட்டுக்கொல்லப் பட்டனர். "ட்ராக்டர்" எனப் பொதுவாக வழங்கும் இழுவான் வண்டிச் சாரதியம் அவனது தொழில். அவன் இறந்துபோனது முதற் கொண்டு அக்குடிசைக்குள் உணவு எதுவும் வருவது இடையாது. எனவே இந்நிலையில் குழந்தையை அடிப்பதையும் பின்னர் அதை நினைத்துத் துன்பப்படுவதையும் பச்சாத்தாபப்படுவதையும், கழிவிரக்கம் கொள்வதையும் தவிர அவளால் எதைத்தான் செய்ய முடியும்?

இதைப்பற்றி அவள் சொல்வதைக் கேட்போம்:- "என்னுடைய மனதில் உள்ள வலி கொஞ்ச நஞ்சமல்ல. அதனால், ஒன்றும் செய்ய என்னால் முடியவில்லை. ஒரு இடமும் போகவும் முடியாது. ஆம், கிழமைக்கொரு முறை அவள் வீட்டைவிட்டு வெளியே போவாள், தடுப்புக் காவலில் வாடும் அவளுடைய மூன்றுவது மகனைக் காண. "கண்களில் ஒற்றிக்கொள்ள." பதினெட்டு வயதுடைய அவன் பெயர் தியாகராஜன். அவன் வேலைபார்க்கும், மரம் அரியும் ஆலையில் வைத்து இராணுவத்தினர் அவனைக் கைது செய்து கொண்டுபோயினர்.

பாடுபட்டு ஏதோ அற்ப சொற்ப உணவும் அவனுக்கெனக் கொண்டுபோவாள் அவள். குருநகர் இராணுவ முகாமில் இத்தகைய தருணங்களில் அவளுடைய விஜய நேரம் பெரும்பாலும் குருநகர் முகாமிற் கழிவது மன்றாட்டத்திலேயே. தனது மகனை விடுவிக்கும்படி இராணுவ அதிகாரிகளிடம் அவள் மன்றாடுவாள். "அவனை விட்டுவிடுவோம் என்றுதான் 'ஆமிக்காரர்கள்' ஒவ்வொரு முறையும் சொல்கிறார்கள். ஆனால், நடப்பதோ ஒன்றுமில்லை. அவன் (மகன் தியாகராஜன்) இன்னமும் அங்கு தான் இருக்கிறான். நான் அங்கே போகும் ஒவ்வொரு முறையும், அவனைக் காணும் வரை, எனக்கு மூச்சே வராது. அவனுக்கு என்ன நேர்ந்ததோ என எண்ணி யெண்ணி நெஞ்சம் புண்ணாவேன். அவனொரு 'புலி' அல்ல. நீங்கள் எனக்கு உதவி செய்வீர்களா?" என்று ஏக்கத்துடன் அவள் என்னைக் கேட்டாள்.

நடந்த சம்பவம் இது தான். தியாகராஜன் ஆலையில் வேலைக்காக இருக்கையில் போராளிகளான இரண்டு இளைஞர்கள், ஆலை-வாயிலில் தமது சைக்கிள்களைப் போட்டு விட்டுத் திடீரென உள்ளே பாய்ந்து சென்றனர். கணப்பொழுதில் பின்கட்டுக்குப் போன அவர்கள், மதிற்சுவரின் மேலாகத் தாவித் தப்பியோடி விடவே, அவர்களைத் துரத்தி அங்கு உட்பிரவேசித்த இராணுவத்தினர், "புலிகள்" தப்பியோட இயாகராஜன் உடந்தையாக இருந்தான் எனச்சந்தேகித்து, அவனைக் கைதாக்கிச் சென்றனர்.

வட இலங்கைத் தமிழ் மக்களில் அநேகமாக ஒவ்வொருவரும் கொடியதொல்லையில் சிக்கிச் சுழலும் அவர்களுடைய இத்தகைய நரகமிய யாழ்ப்பாணத்தில், இத்தகைய இதயத்தைப் பிழியும் அனுபவங்களுக்கு ஆட்பட்டுள்ளனர் எனக் கூறக் கேட்பது சகஜம். இலங்கைத் தீவின் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்கள், பரம்பரை பரம்பரையாக, இப்படி இன்னற் படுத்தப்பட்டு வருகின்றனராயினும், இராணுவ அடக்குமுறைகள் சர்வ சாதாரண, நாளாந்த, நிகழ்ச்சியாகியுள்ளமை கடந்த சில ஆண்டுகளாகத் தான். மக்களின் உணர்ச்சிகள், இடையீடற்ற பெரும் கோர சம்பவங்களை அனுபவித்த பயப் பீதியினால் மரத்துப் போய்விட்டன. வெட்ட வெளிச்சமாக, பலபேர் முன்னிலையில் ஓர் ஆள் கொலை செய்யப்படும்போது, தற்போதெல்லாம் எவரும் தமது அதிர்ச்சியையோ, அதையிட்டு அறியும் ஆவலையோ வெளிக்காட்டிக் கொள்வதில்லை. ஏன்? அது இரண்டில் ஒன்றாகத்தான் இருக்கும். இருக்கமுடியும், எனப் பொதுமக்கள் ஏற்கனவே அறிவர். அதாவது, போராளிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனச் "சந்தேகிக்கப்படும் ஒருவர் தப்பியோடுகையில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பார். அல்லது, பொலிசாருக்கோ, ஆயுதப் படையினருக்கோ, அரசாங்கத்திற்கோ, தமிழ் மக்களின் நலன்களுக்குப் பாதகமாக இரகசியத் தகவல் கொடுத்ததாக நிரூபிக்கப்பட்ட ஒருவர். தமிழ் விடுதலைப் போராளிகளினால் "துரோகி" எனக் பெயர் சூட்டப்பட்டு அழிக்கப்பட்டிருப்பார்.

(தொடரும்)

## இது மூன்றுவது தடவை

(திருவனந்தபுரம்)

மலையாள எழுத்தாளர் ஒருவருக்கு ஞானபீட விருது கிடைப்பது இது மூன்றாவது தடவையாகும். 1984ம் வருடத்துக்குரிய ஒன்றரை இலட்சம் ரூபா ரொக்கப் பணத்தைக் கொண்ட இவ்விருது இம்முறை பிரபல மலையாள நாவலாசிரியர் தகழி சிவசங்கரம்பிள்ளைக்குக் கிடைப்பது தெரிந்ததே. இவரது 'செம்மீன்' நாவலுக்கு முன்னர் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்ததும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## யூகோ. பாரதம் வர்த்தக உறவு

(பெல்கிரேட்)

யூகோஸ்லேவியாவும், பாரதமும வர்த்தக உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

பாரதத்தின் சார்பில் பாரத வர்த்தகத்துறை அமைச்சர் திரு. வி பூட்டாசிங்கும், யூகோஸ்லேவியா சார்பில் அமைச்சர் திரு போஜமோவிச்சும் இவ்வுடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

மூன்றாவது மண்டல நாடுகளுடனான உறவுகள் குறித்தும் இவ்வேளை பிரஸ்தாபிக்கப்பட்டன.

## எதியோப்பியாவுக்கு உதவ உறுதி

(அடிஸ் அபாவா)

எதியோப்பியாவை எதிர்நோக்கியுள்ள உணவுத் தட்டுப்பாடு மற்றும் நெருக்கடிகளை நீக்கும் வகையில் பாரதம் தன்னாலியன்ற பல்வேறு உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளது.

இத்தகவலைப் பாரத வர்த்தக அமைச்சர் திரு. வி. பூட்டாசிங் தெரிவித்துள்ளார்.

## பாக். செயலர் நம்பிக்கை

(புதுடில்லி)

பாரதத்துடனான பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவதில் பெரிதும் உதவும் என்று தற்போது பாரதம் விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சின் செயலாளர் நியாஸ் நயாக் நம்பிக்கை தெரிவித்துள்ளார். நிருபர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

## பஹமாவில் மாநாடு

(லண்டன்)

பொதுநலவமைப்பு நாடுகளின் உச்சிமகாநாடு பஹமாவில் நடைபெறவுள்ளது.

## எம்.ஜி.ஆர். சரீர நிலை ஜாப். நிபுணர் இன்று அறிவிப்பார்

(டோக்கியோ)

தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரனின் உடல் நிலைபற்றிய தனது மருத்துவ அறிக்கையை ஜப்பானிய நரம்பியல் மருத்துவ நிபுணர் டாக்டர் சனூ இன்று புதன்கிழமை வெளியிடுவார் என்று நேற்றுத் தெரிவிக்கப் பட்டது.

முதலமைச்சரை அவர் முறைப்படி பரிசோதனை செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. முதலமைச்சருக்கு அவர் தனது மருத்துவ ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

டாக்டர் சனூவின் மருத்துவ அறிக்கை இன்று வெளியிடப்படும் என்ற தகவல் முதலமைச்சருடன் ஜப்பான் சென்றுள்ள டாக்டர் நரேந்திரன் மூலம் தெரியவந்துள்ளது.

நகோராவிலுள்ள பல்கலைக் கழக ஆஸ்பத்திரியில் இப்பரிசோதனை இடம் பெற்றுள்ளது.

முதலமைச்சர் மிக நன்றாக இருப்பதாகவும் பேசுவதில் தான் இலேசான சிரமம் இருப்பதாகவும் அறிவிக்கப் பட்டது.

தமிழகத்துக்கான கப்பலை முதலமைச்சர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பொறுப் பேற்பார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

## வீடமைப்புக்கு ரூ. 12 கோடி

(கோயம்புத்தூர்)

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையத்தில் தமிழ்நாடு அரசு மேலும் இரண்டாயிரத்து ஐநூறு வீடுகளை நிர்மாணிக்கவுள்ளது.

இதற்குப் பன்னிரண்டு கோடி ரூபா செலவாகும் என்று வீட்டு வாரியத் தலைவர் திருப்பூர் மணிமாறன் தெரிவித்தார்.


## இலங்கை வங்கி

நெல்லியடிக் கிளை

### இடமாற்ற அறிவித்தல்

தற்போது பருத்தித்துறை இலங்கை வங்கிக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் எமது நெல்லியடி வங்கிக் கிளை மீண்டும் 1 8-1985 வியாழக்கிழமை தொடக்கம் திக்கம் வீதி, நெல்லியடி என்ற முகவரியிலுள்ள முன்பு இயங்கிய கட்டிடத்தில் வாடிக்கையாளர்களுக்குப்பணம் கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த ஏனைய வழமையான வங்கிச் சேவைகளை ஆரம்பிக்கும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் பணம் கொடுக்கல் வாங்கல்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள அலுவலகத்தில் தற்பொழுது நடை முறையிலுள்ளவாறு தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

மாவட்ட முகாமையாளர்
யாழ். மாவட்டம், இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

றேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ டெக், இவற்றின் சகல உதிரிப்பாகங்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

சித்ரா ரெக்ஸ்ரைல்ஸ்
(ரெலிகோணர் கிளை)
159, மின்சார நிலைய வீதி,
நவீன சந்தை
யாழ்ப்பாணம்

சிங்கப்பூர், குவைத், டுபாய், அபுதாபி
போன்ற நாடுகளுக்கு!

வீட்டுப் பணிப்பெண்கள், வைத்தியசாலைத் தாதிமார், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் போன்ற இன்னும் பல பதவிகள் பெற்றுச்செல்லும் சகல ஒழுங்குகளுக்கும் ஆண், பெண் இருபாலாரும் உங்கள் பிரயாண ஒழுங்குகளுக்கு பாஸ்போர்ட், புகைப்படங்களுடன் உடன் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

முக்கிய குறிப்பு: துரிதகதியில் பாஸ்போர்ட், பொண்ட், விமான டிக்கட் வசதிகள் உடன் செய்து கொடுக்கப்படும்.

ஒழுங்கு செய்வதற்கு உடன் நாடவேண்டிய ஸ்தாபனம்

## ஷாஹி ஷிபா

ஆத்ம ஆரோக்கிய நிலையம்
125, கடற்கரை வீதி யாழ்ப்பாணம்.
(குருநகர் பழைய பொலிஸ் நிலையம் அருகாமையில்)

ஈழமுரசு

## கடலுக்குச் செல்லும் மீனவரிடம் மீண்டும் றூல், மீன் கொள்ளை!

(குருநகர்)

கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் வள்ளங்கள் மறிக்கப்பட்டு, பிடிபட்ட றூல், மீன் போன்றவைகளை சிலர் அபகரித்து வருவதாக சமூக சேவைச் சங்கங்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. சிறு தீவொன்றில் முகாமிட்டுக்கொண்டிருப்பவர்களே இதனைச் செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடல் பாதுகாப்புச் சட்டத்தை மீறுது மூன்று மைல் தூரத்துக்குள்ளேயே மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்கின்ற போதிலும் இத் தொல்லையினால் இம்சிக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளதாம்.

நேற்று சண்டிகாரில் ஆரம்பம்:

# அதிமுக்கியத்துவம் வாய்ந்த அகாலிதள் தலைவர் கூட்டம்

(புதுடில்லி)

அகாலிதள் தலைவர்களின் கூட்டம் நேற்று அமிர்தசரஸில் நடைபெற்றது. கட்சியின் தலைவர் திரு. லோங்கோவால் தொடக்கி வைத்த இக்கூட்டத்தில் மாவட்டப் பிரிவுத் தலைவர்கள், ஹரியானா, டில்லி, உத்தரப்பிரதேஷ் உட்பட வேறு சில பகுதிகளின் மூத்த தலைவர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

பஞ்சாப் உடன்பாடு எட்டப்பட்ட நான்கு நாட்களுக்குள் நடைபெற்ற இக்கூட்டம் அதிமுக்கியத்துவம் பெறுவதாகக் கூறப்பட்டது.

பஞ்சாப் ஒப்பந்தத்தின் அம்சங்களைப் பற்றி மக்களுக்கு விளக்கும் செயல் திட்டம் ஒன்றை இக்கூட்டம் தயாரிக்கக் கூடும் என்றும் கூட்டம் தொடர்ந்து நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த உடன்பாடு குறித்து சில சுயநலவாதிகள் கிளப்பியுள்ள ஐயப்பாடுகளினால் மக்களிடையே உண்டான சந்தேகங்களை அகற்றுவது மிகவும் அவசியம் என கட்சியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

## உகண்டாவின் சகல விமான போக்குவரத்துகளும் ரத்து

(கம்பாலா)

உகண்டாவின் தலைநகரான கம்பாலாவில் வாழ்க்கை நிலைமை சிறிது சிறிதாகச் சீராகி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. இருந்தும், நாட்டு எல்லைகளைக் கடந்து உகண்டாவினுள் எவரும் வருதல், வெளிச்செல்லல் ஆகியன தடுக்கப்பட்டுள்ளன.

உகண்டாவுக்கும் பிற நாடுகளுக்குமிடையில் விமானப் போக்குவரத்தின்மீது பூரணத் தடை அமுலில் இருந்து வருகிறது. மேலும் வெளிநாடுகளுடனான தொடர்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சென்ற சனிக்கிழமை நடந்த இராணுவப் புரட்சியின் விளைவாக, இராணுவ கமாண்டர், லெப்டினெண்ட் ஜெனரல் டிட்டோ ஒகெல்லோ உகண்டாவின் ஜனாதிபதியாகவும் இராணுவ சபைகளின் தலைவராகவும் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளமை தெரிந்ததே. அத்தருணம் அவர் தேச மக்களுக்கு ஆற்றிய முதலாவது உரையில், இன்னும் ஓர் ஆண்டினுள் பொதுத் தேர்தல்கள் நடைபெறும் என உறுதியளித்தார்.

## சங்காபிஷேகம்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் கோவில் வருடாந்த சங்காபிஷேகத் திருவிழாவும் திருக்கல்யாணமும் இன்று நடைபெறும்.

## அமெரிக்கா மீது ரஷ்யாவின் குற்றச்சாட்டு

(மாஸ்கோ)

அணு ஆயுதங்களின் ஆய்வுகளை முடக்கிவைப்பதென்ற சோவியத் யூனியனின் முடிவையொட்டி அமெரிக்காவின்பதிலை சோவியத் யூனியன் குறை கூறியுள்ளது.

"ஆயுதங்களை மட்டுப்படுத்துவதில் அமெரிக்காவுக்கு விருப்பமில்லை என்பதையே அமெரிக்காவின் இப்பதில் காட்டுகிறதென்று சோவியத் வெளியுறவு மந்திரியின் பிரதிநிதி ஒருவர் கூறியுள்ளார்.

## எம். ஜி. ஆர். உடல்நிலைபற்றி டாக்டர் கானு அறிவிப்பார்

சிகிச்சை பெறுவதற்காக யப்பான் சென்றுள்ள தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனை யப்பான் நரம்பியல் நிபுணர் டாக்டர் கானு நேற்றும், நேற்று முன் தினமும் பரிசோதனை செய்ததாக சென்னையில் அரச அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் நேற்று தெரிவித்தார்.

முதலமைச்சர் அங்கு நலமாக இருப்பதாகவும் வேறு தகவல்கள் எதுவும் அங்கிருந்து கிடைக்கவில்லை எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

டாக்டர் கானு, முதல்வரின் உடல் நிலை பற்றி விபர அறிக்கையை இன்று சமர்ப்பிப்பார்.

தமிழக பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்துக்கான புதிய கப்பலை முதலமைச்சர் அடுத்த வெள்ளிக்கிழமை அங்கு பெற்றுக்கொள்வார்.

### ஜி. சி. ஈ...

... 1ஆம் பக்கத் தொடர்

லையோ வெடிச் சத்தங்களின் மத்தியிலும் எத்தனையோ மாணவர்களின் சாம்பல் பூத்த மேடுகளின் கால் போட்டு நடந்து தனது பாசமிகு தேசத்தின் வளர்ச்சிக்காக கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவரின் கல்விக்கு இடையூறு விளைவிக்காமல் அவர்களது இலட்சியத்திற்கு ஊக்கமூட்டி அவர்களை நற்பிரஜைகளாக்குவது அக்கறை கொண்ட ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும் எனத் தெரிவித்துள்ளார்.

### 150 லட்ச....

...1 ஆம் பக்கத் தொடர்

விநியோகம் துண்டிக்கப்படலாமெனவும் அஞ்சப்படுகின்றது.

இவ்வாறான நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஏதுவாக மின்பாவனையாளர்களை உடனடியாக தமது நிலுவைகளைச் செலுத்துமாறு அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டவிரோதமாக மின்பாவிப்பதை நிறுத்தி, உப அலுவலகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுள்ள அரசாங்க அதிபர், மின் நிலுவைப் பணம் விரைவில் செலுத்தப்படாவிடின் இவ்வாண்டுக்கான நூறு லட்சம் ரூபாவிக்கான புதிய மின் விநியோகத் திட்ட வேலைகளை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கமுடியாதென மின்சார சபை அறிவித்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### தமிழக....

...1-ஆம் பக்கத் தொடர்

கங்கள், வரலாறு, தொழில்நுட்பம், அரசியல், இலக்கியம், தத்துவம் மற்றும் இந்தியக் கலைகளான நடனம் ஓவியம் சம்பந்தமான பல புத்தகங்களை இக்கண்காட்சியில் காணக்கூடியதாகவுள்ளது.

இன்று விடுமுறை தினமாக இருப்பதால் பெருமளவு மாணவர்களும் பொது மக்களும் கண்காட்சியைப் பார்வையிடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### யாழ்தேவி....

நேரத்தில் நாளை முதலாம் திகதி முதல் மாற்றம்கொண்டு வரப்பட்டுள்ளது.

காலை 7-20க்கு காங்கேசன் துறையிலிருந்தும், காலை 7-49க்கு யாழ்ப்பாணத்திலிருந்தும் புறப்படும் யாழ்தேவி பிற்பகல் 3-50க்கு கோட்டையைச் சென்றடையும்.

### ராணுவ....

தெரியாதவர்கள் துப்பாக்கி முனையில் கடத்தியதாக பின்னர் கிடைத்த தகவல்கள் மூலம் தெரியவந்ததாயினும் அதனையும் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

வடக்கிலுள்ள நான்கு ராணுவ முகாம்களின் பாவனைக்காகவும் இங்கு 'டாங்கு' கொண்டுவரப்பட்டதாக தெரியவந்துள்ளது.

### யுத்த நிறுத்....

—1-ஆம் பக்கத் தொடர்

விக்னேஸ்வரன் என்ற வர்த்தகரிடம் ஒரு லட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை ஆயுத முனையில் பதினைந்து பேர் கொள்ளையடித்ததாகவும் லங்கா புவத் அறிவித்துள்ளது.

## யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு யாழ். லயன்ஸ் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரிக்கு யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினர் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபா பெறுமதியான கண் சிகிச்சை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கினர். இவ்வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஆஸ்பத்திரியில் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. ஞா. யுகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.



லயன்ஸ் கழகத்தின் சார்பில் பேராசிரியர் என். சரவணபவானந்தன், ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியரிடம் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கினர். இடமிருந்து வலமாக லயன் அருமைநாயகம், மாவட்ட அத்தியட்சகர் லயன் பேராசிரியர் என். சரவணபவானந்தன், வலயத் தலைவர் எஸ். அற்புதநாதன், லயன் விஜயரத்தினம், வைத்திய அத்தியட்சகர் டாக்டர் நச்சினார்க்கினியர், லயன்ஸ் தலைவர் லயன் ஞா. யுகேந்திரன், லயன் எஸ். இராஜேந்திரா லயன் டாக்டர் யோகநாதன், லயன் செயலாளர் வரேந்திரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

### நேற்றைய....

— 1 ஆம் பக்கத் தொடர்

என்பவருக்கு நேற்றிரவு மின்கம்ப மரண தண்டனை விதிக்கப்பட்டதாக தமிழ் ஈழ இராணுவம் அறிவித்துள்ளது. இவரது சடலம் பஸ் நிலைய முன்பாக கட்டப்பட்டிருந்தது.

பொது மக்களின் முறைப்பாட்டை அடுத்து தீசனும், வேறு சிலரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். தீசன் தனது மைத்துனியான இளம் பெண்ணைக் கெடுத்து, அதன் மூலம் பிறந்த குழந்தையை கொலை செய்வித்து, மைத்துனியை விபச்சாரி என்று ஊரெல்லாம் பறைசாற்றி, அவருக்கு உணவு எதுவும் கொடுக்காது அவரது மரணத்துக்குக் காரணமாக இருந்ததாக தமிழ் ஈழ ராணுவம் நடத்திய விசாரணைகள் மூலம் தெரியவந்தது.

## சீமெந்துப் பொருட்களுடன் லொறி கடத்தல்

(தெல்லிப்பளை)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு நெருப்புக் கற்கள், இரும்புத் தகடுகள் உட்பட வேறு பல பொருட்களை ஏற்றிவந்த லொறி ஒன்று மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு அண்மையில் வைத்து இனந் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

துப்பாக்கி முனையில் லொறியைக் கடத்தியவர்கள், லொறி சில தினங்களுள் ஒப்படைக்கப்படும் என லொறிச் சாரதிக்குத் தெரிவித்ததுடன், பிரயாணச் செலவையும் கொடுத்து லொறிச் சாரதியை இறக்கிவிட்டு சென்றுள்ளனர்.


யாழ் நகரில் சிறப்பான பயிற்சி

SPECIAL ENGLISH COURSES

G. C. E. O/L (85 Dec.) பரீட்சையில்

திறமைச் சித்தி பெற

விசேட ஆங்கில மொழி வகுப்புகள்

உயர்கல்வி, பேச்சுப் பயிற்சி, வாசித்தல்
போன்றவற்றில் திறமை பெற

INTEGRATED ENGLISH

★ 4 மாத துரித பயிற்சி

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்

ஆசிரியர்: திரு. T. N. பஞ்சாட்சரம்

★ வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில்

ஆரம்பம்: 2-8-1985

விபரங்களுக்கு: நேரில் / தபாலில்

ASTAN INSTITUTE

166/1, HOSPITAL ROAD, JAFFNA.


'ஈழமுரசு' சாயிபாபா அடவர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 31-07-85 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
தொலைபேசி 123336